**களனி பல்கலைக்கழகம் - 2020**

**-------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

களனி பல்கலைக்கழகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 108(1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்

இயன்றவரையில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில்

ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “சிறப்பாகக் திட்டமிட்டு பேணுதல்” நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்படு வாழ்க்கைக் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமை காரணத்தினால் கிரயம் ரூபா 1,641,021,283 ஆன நிலையான சொத்துக்கள் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டிருப்பினும் இன்னுமாக பயன்படுத்தப்பட்டு வந்தது. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீட்டு குறைப்பாடு இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 03 பிரகாரம் மீள் திருத்தப்படுவதற்கு ஆண்டினுள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொழிநுட்ப அறிவுடன் கூடிய 4 பதவியணி அங்கத்தவர்களைக் கொண்ட தொழிநுட்ப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பிரயோக நிலை கருத்திற் கொள்ளப்பட்டு கொள்கை ரீதியான பரிந்துரைகள் மேல் நிதி குழுவிற்கும் கட்டுப்பாட்டு சபைக்கும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பெறுமதி ரூபா 30,440,902 ஆன ஜெனரேட்டர் மற்றும் மொத்த கிரயம் ரூபா 1,408,100 ஆன 3 பிரதியிடும் இயந்திரங்கள் சரியான சொத்து வகுப்பின் கீழ் கணக்கிடப்படாமை காரணத்தினால் மீளாய்வாண்டில் தேய்மானம் ரூபா 2,725,410 குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தமையினால் ஆண்டின் மிகை அப் பெறுமதியினால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சொத்து வகையீட்டு குறைப்பாடு 2021 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது. | சரியான வகையீட்டின் கீழ் சொத்து கணக்கிடப்பட்டு சரியாக தேய்மானம் கணிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நடைமுறை வேலையின் கீழ் காணப்பட்ட மொத்த பெறுமதி ரூபா 790,400,309 ஆன 04 கட்டிடங்கள் மீளாய்வாண்டு தொடக்கம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டமை காரணத்தினால் கட்டடிங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருப்பினும் அக் கட்டிடங்களுக்கு தொடர்புடைய ரூபா 39,520,015 ஆன ஆண்டின் தேய்மானம் கணக்கிடப்படாமையினால் ஆண்டின் மிகை அப் பெறமதியினால் அதிகமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கட்டுமானம் மூலதனமாக்கல் மேற்கொள்வதாவது, தொடர்புடைய அனைத்து கட்டுமான நடவடிக்கைகளும் நிறைவுப் பெற்றது என மற்றும் பல்கலைக்கழகத்தின் பயன்பாட்டிற்காக ஈடுப்படுத்தப்பட முடியுமென செயற்திட்ட அலுவலகத்தில் தெரிவிக்கப்படுகின்றமை அடிப்படையில் ஆகும். | தொடர்புடைய கட்டிடங்கள் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் எதிர்காலத்தில் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியுமென செயற்திட்ட முகாமைத்துவத்தினால் பரிந்துரை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் அக் கட்டிடங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு வருகின்றமை காரணத்தினால் தேய்மானம் கணிக்கப்படல் வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| ஆண்டு இறுதி திகதிக்கு பௌதீக இருப்பு பெறுமதி | 44,269,722 | 48,848,301 | 4,578,579 | வருடாந்த இருப்பு ஒப்பாய்வு அறிக்கை பிரகாரம் பௌதீக இருப்பு பெறுமதி மற்றும் நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள இருப்பு பெறுமதி இடையில் வித்தியாசத்திற்கு காரணங்கள் அடையாளப்படுத்தப்படுவதற்கு தற்போது சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | இருப்பு ஒப்பாய்வு அறிக்கை பிரகாரம் சரியான இருப்பு நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஒப்பந்தம் மீறல் அடிப்படையில் 07 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 41,583,486 ஆன தொகை மீளாய்வாண்டின் | மூன்று நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடனும் ஒருவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு | அறவிடப்பட வேண்டிய பணம் விரைவாக அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுகின்றதுடன் மற்றைய மூவரின் விருப்பின் அடிப்படையில் அவர்களின் சேமலாப நிதியங்களிலிருந்து மற்றும் ஓய்வூதிய நிதியத்திலிருந்து அறவிடப்படும். | எடுக்கப்படல் வேண்டும். |
| **(ஆ)** பதவியணியில் 17 உத்தியோகத்தர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த கடன் தொகையின் கூட்டுத்தொகை ரூபா 912,902 இற்காக மீளாய்வாண்டினுள் எந்தவொரு தவணையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 14 உத்தியோகத்தர்களின் சேமலாப நிதியம் விடுவிக்கும் போது அறவிடப்படுவதற்கு மற்றும் 3 உத்தியோகத்தர்களின் தவணை அடிப்படையில் அறவிடப்படுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அறவிடப்பட வேண்டிய பணம் விரைவாக அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்தப்பட வேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இற்கு செலுத்தப்பட வேண்டிய கணக்கின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த மொத்த பெறுமதி ரூபா 2,615,824 ஆன இரத்து செய்யப்பட்ட 257 காசோலைகள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீள செலுத்துவதற்காக கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ள காசோலைகளுக்கு தொடர்புடைய கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுவதுடன் அவ்வாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டிராத மற்றும் நினைவூட்டல் கடிதங்களுக்கு பதில் அற்ற, 06 மாதங்களை மிகைத்துள்ள காசோலைகளுக்கு தொடர்புடைய பெறுமதி நிதி பிரமாணம் பிரகாரம் வருமானத்திற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | தாமதமின்றி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாண கோவை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச | | | |

| | | | |
|---|---|---|---|
| நிதிச் சுற்றறிக்கை (i) நிதி பிரமாணம் 371 | 2016 ஆம் ஆண்டில் இருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காவப்பகுதியினுள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 4,410,277 ஆன முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்து முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) நிதி பிரமாணம் 571 | இரு ஆண்டினை மிகைத்த கூட்டுத்தொகை பெறுமதி ரூபா 63,460,015 ஆன 552 நானாவித வைப்புக்கள் தொடர்பாக மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கு அதிகமான காலம் கடந்த ரூபா 16,946,500 ஆன நூலக வைப்பு தொடர்பாக நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் வைப்புக் காலம் 02 ஆண்டுகளை மிகைத்த வைப்புக்கள் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. நூலக வைப்புக்கள் தேவையான சான்றுகள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் மாணவர்களுக்கு விடுவிக்கப்படும். | நிதி பிரமாணம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2006 சனவரி 25 திகதிய இலங்கை பெறுகை வழிக்காட்டி கோவையின் 4.3.1 மற்றும் 4.3.2 பிரிவு | பல்கலைக்கழகத்தின் புதிய உடல் அபிவிருத்தி மத்திய நிலைய பிரிதேசத்தின் நிலத்தினை அலங்கரித்தல் தொடர்பான பணி நிறைவேற்றலுடன் தொடர்புடைய ரூபா 11,929,352 ஆன (வட் அற்ற) மொத்த கிரய மதிப்பீட்டிற்காக துணை வேந்தரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய அனைத்து செலவுகளும் உள்ளடக்கப்பட்டு முழு கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு நிறுவன அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிக்காட்டி கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
----------------

### 2.1 நிதி விளைவு
---------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 306,835,849 ஆன மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 690,497,428 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 383,661,579 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ் வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டின் உள்ளக வருமானம் மற்றும் மஹபொல அளிப்பு குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதி நிலைமைக் கூற்றில் உரிமையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற கட்டிட செயற்திட்ட நிதியங்கள் இரண்டின் மொத்த பெறுமதி ரூபா 17,272,549 மீளாய்வாண்டில் எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | ரூபா 16,422,549 ஆன "CODL Capital Reserve" நிதியத்தின் கீழ் Six Storied Examination Building செயற்திட்டம் இதுவரையில் நிறைவடைந்திருக்கவில்லை. ரூபா 850,000 ஆன மீதியொன்று காணப்படுகின்ற செயற்திட்டம் இது வரையில் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டவுடன் அதற்காக பயன்படுத்தப்படும். | தொடர்புடைய செயற்திட்டம் விரைவாக ஆரம்பிக்கப்பட்டு நிதியினை வினைத்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும். |

### 3.2 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| முறையான திட்டமொன்று இன்றி பல்கலைக்கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவிற்காக 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 2,330,055 ஆன பரிசுப் பொருட்கள் கணக்காய்வு திகதியான 2021 ஏப்ரல் 01 ஆம் திகதி வரையிலும் வழங்கப்படாது களஞ்சியசாலையில் காணப்பட்டது. | பல்கலைக்கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவிற்காக குழு பரிந்துரையின் மீது நிறும பரிசுப் பொருட்களுக்காக தொடர்புடைய கொள்வனவு மேற்கொள்ளப்பட்டதுடன் அந்தந்த பிரிவுகளில் தேவையின் அடிப்படையில் கோரப்பட்ட விடத்து விடுவித்தல்கள் மேற்கொள்ளப்படும். | தேவை சரியாக அடையாளப்படுத்தப்பட்டு கொள்வனவுகள் மேற்கொள்வதற்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2 ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்டு நிறைவு செய்வதற்காக 2016 ஆம் ஆண்டில் நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 183 மில்லியான கணினி மத்திய நிலைய கட்டிடம் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை | கணினி மத்திய நிலைய கட்டடிடத்தில் நிர்மாணிப்பு நடவடிக்கை தாமதத்திற்காக பல்கலைக்கழகத்தினால் தாமதக் கட்டணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே ஒப்பந்தக்கார அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு இந்த நிர்மாணிப்பு விரைவாக பூரணப்படுத்தப்பட்டு பெற்றுக் கொடுக்குமாறு பல்கலைக்கழகத்தினால் எழுத்து மூலமாக பல தடவைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2020 திசெம்பர் 31 இல் அரசாங்க பொறியியல் | தாமதங்கள் தவிர்க்கப்பட்டு திட்டமிடப்பட்ட பிரகாரம் நிர்மாணிப்பு பூர்ணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

கூட்டுத்தாபனத்தினால் ரூபா 174 மில்லியன் ஆன நிர்மாணிப்பு வேலை நிறைவேற்றப்பட்டுள்ளது.

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இற்கு பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்வி மற்றும் கல்விசாரா பதவியணி முறைாயக 804 மற்றும் 896 ஆக காணப்பட்டதுன் உள்ளவாரான பதவியணி முறையாக 653 மற்றும் 806 ஆகியமையினால் வெற்றிடங்கள் முறையாக ரூபா 151 மற்றும் 90 ஆக காணப்பட்டது. | வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதுடன் கொவிட் 19 நிலையினால் அலுவலக நடவடிக்கைகள் போதுமான பிரகாரம் நிறைவேற்றப்படாததினால் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படவில்லை. | பதவியணி தேவைகள் உரிய காலத்தில் மீளாய்வு செய்யப்பட்டு அத்தியாவசிய பதவிகளுக்காக மட்டும் ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |